OS. 19/2023

நாள். 02.12.2025

வா.சா.1 – நப்ரோஸ்கான்

<u>1ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

3 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த 3 இலக்க சொத்துக்களுக்கும் வழக்குரையில் நான்குமால்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் இலக்க சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரமும், 2, 3 இலக்க சொத்துக்களுக்கு பாகப்பிரிவினையும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். ஆரிப் மற்றும் அகமது ஜலாலுதீனும் அண்ணன் தம்பி என்றால் சரிதான். அவர்களின் தகப்பனார் பெயர் ஹமீது. ஆரிப் மற்றும் அகமது ஜலாலுதீன் மற்றும் அவரது தகப்பனார் ஹமீது இறந்துவிட்டனர் என்றால் சரிதான். வழக்கு 1ம்அயிட்ட சொத்து ஆரிபுக்கு தனிப்பட்டமுறையில் பாத்தியம் என்றும், அதனால் விளம்புகை பரிகாரமும் கேட்டு வழக்கு தாக்கல செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆரிபுக்கு 1ம் இலக்க சொத்து எப்படி பாத்தியம் என்றால் பூர்வீகம். சர்வே எண்.208/3க்கு 1956ம் வருட செட்டில்மென்டில் ஆரிபு பெயரில் பட்டா ஏற்பட்டிருக்கிறதா அல்லது ஆரிதீன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் ஆரிதீன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. ஆரிபு மற்றும் ஆரிதீன் ஆகியோர்களின் தகப்பனார் பெயர் ஹமீது என்றால் சரிதான். ஆரிபு மற்றும் ஆரிதீன் என்ற பெயர் ஒரே நபரை குறிக்கும் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.208/3ல் வடபுறம் ஒரு சொத்து இருப்பதாகவும், தென்புறம் ஒரு சொத்து இருப்பதாகவும் வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சர்வே எண்ணில் கண்ட தென்புறம் உள்ள சொத்தை என் தாயார் அவரது பிள்ளைகளுக்கு இனாமாக கொடுத்த சொத்து யாருக்கு பாத்தியம் என்றால் ஆரிபுக்கு பாத்தியம். ஆரிபுக்கு சொத்து பாத்தியம் என்றால் இஸ்லாமிய சட்டத்தின் படி 1/8 பங்குதான் பாத்தியம் என்றால் சரிதான். அதனால் ஆரிபின் மனைவியான 1ம் வாதி 4, 6, 8 வாதிகளுக்கும், 3ம் பிரதிவாதிக்கும் எழுதிக்கொடுத்த செட்டில் மென்ட் ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. அந்த செட்டில்மென்ட் பத்திரங்கள்

எழுத்து மூலமாக எழுதிக்கொடுக்கப்பட்டதுதான். என் தாயார் 4, 6, 8 வாதிகளுக்கும், 3ம் பிரதிவாதிக்கும் 07.03.2000, 18.112003, 01.12.2003 மற்றும் 13.10.2013 தேதிகளில் எழுதிக்கொடுத்த இனாம் செட்டில் மென்ட் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்து (1 ஏக்கர் 21 சென்டு) கட்டிடமாக உள்ளதா அல்லது காலியாக உள்ளதா என்றால் காலியாக உள்ளது. தாவா 1ம் இலக்க சொத்து அப்துல் ஹமிது என்பவரின் சொத்தாக இருந்தால் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பங்கு உண்டு என்றால் சரிதான். வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ள வம்சாவளி பட்டியல் தவறு என 1ம் பிரதிவாதி எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அகமது ஜலாலுதீனுக்கு 2 ஆண் பிள்ளைகள் என்றால் சரிதான். மூத்த பிள்ளை முகம்மது முபீன், இரண்டாவது மகன் முகம்மது அஸ்மீன் என்றால் சரிதான். முகம்மது முபீனுக்கு ஒரு மகனும், இரண்டு மகள்களும் உள்ளார்கள் என்றும், அவர்கள் மூவரும் மலேசியாவில் வசித்து வருகிறார்கள் என்று 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் முகம்மது முபீனுக்கு மப்ரினா, மிர்சா மஸ்வான், முகம்மது முஜமில் ஆகியோர்கள் வாரிசுகள் என விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றும், அதை மறுத்து பதில் உரை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் முகம்மது முபீனுக்கு மப்ரினா, மிர்சா மஸ்வான், முகம்மது முஜமில் ஆகியோர்கள் வாரிசுகள்என சொல்லிய பிறகும் அவர்களை தரப்பினராக சேர்க்க நாங்கள் எந்தவித முயற்சியும் செய்யவில்லை என்றால் எங்கள் தரப்பில் அவர்களின் விலாசங்கள் தருமாறு குறிப்பாணை கொடுக்கப்பட்ட பிறகும் கொடுக்கவில்லை என்பதால் எங்களால் சேர்க்க முடியவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது )

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.